2002 ஏப்ரல் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, தேவையிருப்பின் மீண்டும் அவருடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 41 முதல் 45 வரையிலான ஐந்து அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13--எரிசக்தித் துறை, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை எண் 13-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.200,00,00,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.